# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 59 — 1973 මැයි 11 වැනි සිකුරාදා — 1973.05.11

59 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு மே மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 435 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 442 |


## பதவிகள் — வெற்றிடம்

"இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டாலொழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவிபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

---

### முக்கிய அறிவித்தல்

(இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி **(II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.**

எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழித்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

### இலங்கை வங்கி

*நிலமனையிடங்கள் பகுதி, முகாமையாளருக்கு உதவியாளர் பதவிகள்*

நிலமனையிடங்கள் பகுதி, முகாமையாளருக்கு உதவியாளர் பதவிகள் இரண்டுக்கு விண்ணப்பங்கள் கேட்கப்படுகின்றன.

முகாமையாளர், ஆளணி பகுதி, இலங்கை வங்கி, மத்திய அலுவலகம், யோர்க் வீதி, கொழும்பு 1 என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளப்படக்கூடிய பத்திரங்களிலான விண்ணப்பங்கள் 1973 ம் ஆண்டு ஜூன் மாதம் 2 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக அவரைச் சேர்தல் வேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்களை தபாலில் பெறவிரும்புவோர் தமது முகவரியிடப்பட்ட முத்திரையிட்ட 9"×4" அளவினதான தபாலுறைகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

1. தகவுடைமை.—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றை திருப்தி செய்யவேண்டும் :—

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 2.6.1973 ல் 25 வயதிற்கு குறைந்தவரில்லாதவராகவும் 40 வயதிற்கு மேற்படாதவராகவுமிருத்தல் வேண்டும்.

(இ) சிறந்த நற்குணமுடையவராகவும் உடல்நலமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

நிலமனையிடங்கள் முகாமையாளருக்கு உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிப்பவர் ஒவ்வொருவரும் பின்வரும் கல்வித் தகைமைகளில் ஒன்றை பெற்றிருப்பவராக இருத்தல் வேண்டும் :—

(1) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம்.

(2) ஒன்றுக்கு மேற்படாத தடவை பரீட்சைக்குத் தோற்றி, சிங்களம்/தமிழ், எண்கணிதம்/கணிதம் ஆகியன உட்பட ஆறு பாடங்களில் சித்தியுடன் க. பொ. த. (சாதாரண)ப் பத்திரம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

மேலும், விண்ணப்பகாரர் குறைந்த பட்சம் கீழ்கண்ட உயர் தொழில் சார்ந்த தகைமைகளில் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(1) இலண்டன் இன்ஸ்ரிற்ரியூற் சிற்றி அன்ட் கில்ட்ஸ் பில்டிங் ரெக்னிஷன் சேர்டிபிக்கட் ;

(2) இலண்டன் இன்ஸ்ரிற்ரியூற் சிற்றி அன்ட் கில்ட்ஸ் பிறிக்லேயிங் அன்ட் பிளாஸ்ரறிங் பைனல் சேர்டிபிக்கட் ;

(3) இலண்டன் இன்ஸ்ரிற்ரியூற் சிற்றி அன்ட் கில்ட்ஸ் பில்டிங் ரேட்ஸ் புல் ரெக்னொலொஜிக்கல் சேர்டிபிக்கட் ;

(4) கல்வி அமைச்சின் தொழில் நுட்ப நிலையங்களில் க. தொ. உ. (சிவில்) சான்றிதழ் அல்லது தொழில் நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) சான்றிதழ் ;

(5) அம்பாறை, ஹாடி சிரேஷ்ட தொழில் நுட்ப நிலையத்தில் சிவில் எந்திரத்தொழில் தகுதித் தேர்வுப் பத்திரம் ;

(6) கல்வி அமைச்சின் தொழில் நுட்ப நிலையங்களின் கட்டடம் அமைத்தல் (பின்னோர அமர்வு) சான்றிதழ் ;

(7) சமமான அல்லது உயர்ந்த தகைமைகளும்.

மேலும், போதியதாவென வங்கி கருதுகிறவாறு கட்டடம் கட்டுவதிலும், தாபரிப்பதிலும், மின்னியல் வேலையிலும் செய்முறை அனுபவம் இருத்தல் வேண்டும்.

2. சம்பள அளவுத்திட்டம்.—தகுதிகாண் நிலையில் அடிப்படைச் சம்பளம் மாதாந்தம் ரூ. 325/-.

நிரந்தரமாக்கப்பட்டபின் ரூ. 375—ரூ. 965 / 3×25 ; 1×35 ; 8×30 ; 6×40

இலங்கை வங்கியின் ஒழுங்கு விதிகளுக்கமைய வாழ்க்கைச் செலவுப்படி பெறுவர்.

3. பிணை.—தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர் ஒன்றில் ரொக்கமாக அல்லது பற்றுறுதி பிணைப்பாக அல்லது இவை இரண்டின் இணைப்பாக 10,000 ரூபாவரை அவர்களது கடமைகளை செவ்வையாகவும் நம்பிக்கையாகவும் செயலாற்றுவதற்கு அடைமானமாக செலுத்த வேண்டப்படுவர்.

4. சேவை நிபந்தனைகள்.—தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரர்—

(அ) நியமிப்புக்கு முன்னதாக அரசாங்க ஆஸ்பத்திரியில் மருத்துவ பரீட்சைக்கு உட்படும் வண்ணம் வேண்டப்படுவர்.

(ஆ) நியமித்த திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்கு தகுதிகாண் நிலையில் கடமையாற்ற வேண்டும்.

(இ) 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிக் கொள்கையை செயற்படுத்துவதற்கு தற்போதுள்ள அல்லது வருங்காலத்தில் புகுத்தக்கூடிய எந்தச் சட்டங்களுக்கும் இணங்கி ஒழுகுவாரென்றும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(ஈ) அரசாங்கத்தினால் இத்திட்டத்தில் எவ்விதமான மாறுபாடுகளுக்கு உட்பட்டவாறு வங்கியின் ஓய்வுகால உபகாரச் சம்பளத் திட்டத்தில் சேரும்படி கேட்டுக்கொள்ளப்படும்.

(உ) 55 ஆண்டுகள் வயதில் அடைந்தவுடன் வங்கியின் சேவையிலிருந்து ஓய்வுபெறுமாறு வேண்டப்படுவர்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர் நியமித்த திகதியிலிருந்து மூன்று வருடங்கள் சேவையிலிருந்த பின்னராக தேவைப்பட்ட நிலையில் அரசகரும மொழியில் சித்தியெய்தியும் அவர்களுடைய சேவை திருப்திகரமாக கண்ட பின்னரே, அவர்களது நியமிப்புகளில் உறுதிசெய்யப்படுவர்.

மேலும் சேவையில் ஐந்தாம் ஆண்டு பூர்த்தி செய்யுமுன்பாக, நான்காம் ஆண்டு முடிவுறும்போது பெறும் சம்பள ஏற்றத்திற்கு மேம்பட்டு சம்பள ஏற்றம் பெறுவதற்கு வங்கியினுல் அல்லது அதன் சார்பில் நடாத்தப்படும் அரசகரும மொழி 4 ம் படிநிலை தேர்வுப் பரீட்சையில் சித்திபெறவேண்டும்.

6. விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணப்படுவனவற்றின் பிரதிகளை (மூலமல்லாத) இணைத்தல் வேண்டும் :—

(1) பிறப்பின் பதிவுசெய்யப்பட்ட நற்சான்று.
(குறிப்பு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவிநன்கொடைபெறும் பாடசாலை பிரமாணங்கட்கமைய கொடுக்கப்பட்ட பிறப்பு நற்சான்றுகள் ஏற்கப்படமாட்டாது)

(2) கல்வித் தகைமைகளின் சான்றிதழ்கள்.

(3) உயர்தொழில்/தொழில் நுட்ப சான்றிதழ்கள்.

(4) விண்ணப்பகாரரின் திறமை, நடத்தை பற்றி அண்மையில் பெறப்பட்ட மூன்று நடத்தை சான்று பத்திரங்கள்.

7. விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு கொழும்புக்கு அழைக்கப்படுவர். இதற்கான பிரயாணச் செலவோ வேறு செலவோ வங்கியால் வழங்கப்படமாட்டாது.

8. விண்ணப்பகாரர் தங்கள் விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர். தங்கள் விண்ணப்பங்கள் கிடைத்ததற்கு பதில் வேண்டுவோர் தங்கள் முகவரி எழுதப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறை ஒன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

9. விண்ணப்பங்கள் அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மூலையில் " நிலமனியிடங்கள் பகுதி, முகாமையாளருக்கு உதவியாளர் பதவிகளுக்கு விண்ணப்பம் " என்று தெளிவாக எழுதப்படவேண்டும்.

10. தேவையான தகுதிகள் இல்லாதவர்கள் விண்ணப்பிக்க வேண்டாமென தயவாக வேண்டப்படுகின்றனர். இவ் விளம்பரம் விதிகள் எல்லாவற்றிற்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றுக் கொடுத்திருப்பின் அது தேர்வுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் அவ் விண்ணப்பகாரருக்கு தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் தெரிவுசெய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

12. விண்ணப்பகாரரை சிபாரிசு செய்யவிரும்பும் எவரும் அவ் விண்ணப்பகாரருக்கு நடத்தை சான்றுப்பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபாரிசு செய்யலாம். ஆனுல் குறித்தவோர் விண்ணப்பகாரர் விடயத்தில் தலையிட்டு அவருக்கு ஆதரவுதேட முயற்சித்தால் அவ்விண்ணப்பகாரருக்கு தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

எஸ். வீ. வீரசிங்க,
முகாமையாளர்,
ஆளணி பகுதி.

5-177—11.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 59.

---

சமூக சேவைகள் அமைச்சு

ஸ்ரீலங்கா சமூக வேலைப் பாடசாலையில்
நூல் நிலையப் பொறுப்பாளர் பதவி

திருத்தப்பட்ட அறிவித்தல்

1972.12.08 ம் தேதியில் ஸ்ரீ லங்கா குடியரசின் வர்த்தமானியில் I ம் பாகம் II ம் பகுதியில் வெளியிட்ட மேற்படி பதவிக்கான அறிவித்தலைக் கவனிக்குக.

5 ம் பகுதியில் குறிக்கப்பட்ட கல்வித் தகைமைகள் கீழ்க்கண்டவாறு திருத்தப்பட்டுள்ளன :—

(அ) விண்ணப்பகாரர் சிறந்த நற்குணமுடையவராகவும் உடல் நலமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) இலங்கை நூலக அவையின் முதல் பரீட்சையில் அல்லது பல்கலைக்கழகமொன்றினுல் நூலகர் பதவியில் டிப்ளோமா பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட நூல் நிலையத்தில் நூல் நிலையப் பொறுப்பாளர் அல்லது உதவி நூல் நிலையப் பொறுப்பாளராய்க் குறைந்தபட்சம் 6 மாதங்கள் சேவை அனுபவமிருத்தல் வேண்டும்.

மேற்குறிக்கப்பட்ட வர்த்தமானியின் அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பங்களைத் தயாரித்து பதிவுத் தபாலில் 21.05.73 இல் அல்லது அதன் முன்பாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

இதற்கு முன்னர் விண்ணப்பித்தவர்கள் மறுபடியும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

பி. டி. உடுவல,
காரியதரிசி, சமூகசேவா அமைச்சு.

சமூகசேவைகள் அமைச்சு,
இல. 14, பான்ஸ் இடம்,
கொழும்பு 7,
02.05.1973.

5-206—11.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 59.

---

நீர் வழங்கல் வடிகாலமைப்பு திணைக்களம்

இரசாயனர்—பக்றீரியலாளர் பதவி

நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவீதிகள் அமைச்சின் நீர் வழங்கல் வடிகாலமைப்புத் திணைக்களத்தில் இரசாயனரும்—பக்றீரியலாளருமான ஒரு பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் நிரப்பப்பெற்று செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, அ.பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரிக்கு பின்வரும் திகதிகளிலோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள்—11.06.1973.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—18.06.1973.

குறிப்புகள் :—

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9"×4" அளவிற்கு குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்துடன் அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் கூறுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனுல் வரும் இடருக்கு தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாடுகளிலுள்ள அபேட்சகர்கள் அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்க பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் அவ்வபேட்சகர்கள் விரும்பினுல், விண்ணப்பப் படிவங்களை இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அண்மையிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

(iv) மருத்துவ சோதனையும் பயணச்செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் செய்வதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலம் உடையவர்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்யும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாளர் ஒருவரிடம் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்கான கட்டணத்தையும், அவர்கள் இலங்கைக்கு பயணம் செய்வதற்கான பயணச் செலவையும் உத்தியோகத்தர்கள் தாமே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :—

(அ) இப்பதவி தற்காலிகமானது. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் அரசாங்க சேவை சகாயநிதிக்கு உதவு தொகை செலுத்தவேண்டும்.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட பிணைப்பணம் செலுத்தும்படி கேட்கப்படலாம்.

3. சம்பள விகிதம் :—

(அ) இப்பதவிக்குரிய சம்பள விகிதம் பின்வருமாறு :—ஒருங்கு திரட்டப் பெற்ற வருடாந்த சம்பளம் ரூபா 7,440—10 × 360 உம் 11 × 480—ரூபா 16,320 ஆகும். (வருடாந்த சம்பளம் ரூபா 11,520 ற்கும், ரூபா 14,400 ற்கும் முன்னர் வினைத்திறமை காண் தடைகளுண்டு).

லண்டன் றோயல் இராசயனர் நிறுவனத்தின் சக அங்கத்தவராக (ஏ. ஆர். ஐ. சி. லண்டன்) தெரியப்படுங்கால் ரூபா 7,800 குறையாத சம்பளத்தில் வைக்கப்படுவர்.

(ஆ) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் ஏற்கனவே லண்டன் றோயல் இரசாயனர் நிறுவனத்தின் சக அங்கத்தவராக இருப்பின் அல்லது அதனிலும் உயர்ந்த தகைமைகளை பெற்றிருப்பின் ரூபா 7,800 ஆரம்ப சம்பளத்தில் வைக்கப்படுவர்.

(இ) உத்தியோகத்தர் பரிபூரண தொழிற்றகைமைகளை பெருவிடில் (அதாவது ஏ.ஆர்.ஐ.சி அல்லது எம். எஸ்சி. அல்லது இவற்றிற்கு சமமான அல்லது உயர்ந்த தகைமைகளை பெறுவிடில்) ரூபா 11,520 ற்கு மேலதிகமான சம்பள விகிதத்தை பெறுவதற்கு அருகதையற்றவராவர்.

4. தேவையான தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்பவராகத் திருப்தியான சான்று காட்ட வேண்டும்.

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்கவேண்டும்.

(ஆ) 18.06.1973 ஆந் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்கவேண்டும். (அரசாங்க சேவையிலிருப்போருக்கு இந்த வயதெல்லை பாதிக்காது.)

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இரசாயனத்தில் விசேட பட்டம் (1 ம் அல்லது 2 ம் தரம்) பெற்றவராக இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு :—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)

(ஆ) பல்கலைக்கழகப்பட்டம் அல்லது ஆக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றுள் ஒன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றனவாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமை அல்லது தொழில் நுட்பத்தகைமை ஆகியவை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி யடைந்த ஆக ஆயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களை சமர்ப்பிக்கும்படி வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்ப்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பங்கள் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக்குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், நீர்ப்பாசன, மின்சக்தி பெருந்தெருக்கள் அமைச்சு என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இந்த அமைச்சிலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காகிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக்குறிப்பிடப்பட்டுள்ளது) அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்களுக்கு விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமையு ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைகளுக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின் படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும் படி கேட்கும் உரிமை உடையவராகார்.

ம. சந்திரசேன,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
அ. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 1973.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

#### இரசாயனர்—பக்றீரியலாளர் பதவி

1. முழுப் பெயர் :————.
(தனிஎழுத்தில்)

2. நிரந்தர விலாசம் :————.

3. (அ) பிறந்த திகதி :————.
(ஆ) 1973.06.18 ல் வயது :———— வருடம் :————. மாதம் :————. நாட்கள் :————

4. சாதியம் :————.
(அ) இலங்கையராயின் வம்சாவழி காரணமாகவா அல்லது பதிவு காரணமாகவா ?
(ஆ) வம்சாவழியினால் இலங்கைப் பிரஜையாயின், பின்வருவோர் பிறந்த இடத்தைக் குறிப்பிடுக.
i. விண்ணப்பதாரி :————.
ii. விண்ணப்பதாரியின் தந்தை :————.
iii. விண்ணப்பதாரியின் தந்தை வழிப் பாட்டன் :————.
iv. விண்ணப்பதாரியின் தந்தை வழிப் பூட்டன் :————.

5. (அ) பால் :————.
(ஆ) கல்யாணமானவரா, தனிப்பட்டவரா, தாரமிழந்தவரா அல்லது விதவையா :————.

6. கல்வித் தகைமைகளும் உயர்தொழிற்றகைமைகளும் :————.

7. சித்தியெய்திய உயர் பரீட்சை :—
i. சிங்களம் :————.
ii. தமிழ் :————.
iii. ஆங்கிலம் :————.

8. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவிற்கு :?————.

9. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா? அங்ஙனமாயின் இலக்கத்துடனும் திகதியுடனும் விபரங்களைக் கொடுக்கவும் :————.

10. தற்போதைய தொழிலும், முந்திய நியமனங்கள் ஏதாவது இருப்பின் அவற்றின் விபரங்களும் :————

11. வேறு ஏதாவது விபரங்கள் :————.

இந்த விண்ணப்பப்பத்திரத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் செம்மையானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இந்த விண்ணப்பத்தில் நான் குறிப்பிட்டுள்ள விபரம் எதுவும் உண்மையற்றதாகவோ அல்லது செம்மையற்றதாகவோ இருப்பின், தேர்வுக்கு முன்னர் அத்தகைய தவறு கண்டுபிடிக்கப்படின். எனது தகுதியை இழக்கக்கூடும் என்பதையும், தேர்வுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கஞ் செய்யப்படலாம் என்பதையும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரின் கையொப்பம்.

திகதி :————.

5-201—11.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 59.

**களுத்துறை மாவட்டத்தில், பஸ்துன் கோரளை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில், வெலிபென்ன கிராம சபை பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவி**

களுத்துறை மாவட்டத்தில், பஸ்துன் கோரளை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில், இந்திகஸ்துடுவ, வலகெதர, மீகம, ஆந்தாவெல, லெவ்வந்துவ, வெலிபென்ன மேற்கு, வெலிபென்ன கிழக்கு எனும் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கும் வெலிபென்ன கிராம சபைப் பிரதேசத்திற்கு திடீர் மரண விசாரணையாளர் பதவிக்காய விண்ணப்பங்கள் கீழ்க்காணும் தகுதிகளுக்குட்பட்டவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1973, ஜூன் 07 ந் திகதிக்கோ அல்லது அதற்கு முன்பதாகவோ கிடைக்கக் கூடியதாக, "அரசாங்க அதிபர், கச்சேரி, களுத்துறை" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. இப்பதவிக்கு சம்பளம் கொடுக்கப்படமாட்டாது. ஆயினும், ஒவ்வொரு திடீர் மரண விசாரணைக்கு ரூபா 10/- விதம் வழங்கப்படும்.

3. தகைமைகள்.—தாம் கீழ்க்காணும் தகைமைகளையுடையோர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் தினத்தன்று 20 வயதிற்குக் கீழ்ப்படாததும் 60 வயதிற்கு மேற்படாததுமான வயது ;

(ஆ) சிறந்த நற்குணமும், உடல் ஆரோக்கியமும் உள்ளவராகவும் ;

(இ) விண்ணப்பதாரர் இப்பிரதேசத்தில் நிரந்தர வாசியாகவும் ;

(ஈ) சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் குறைந்த பட்சம் 8 ந் தரத்திலேனும் சித்தியடைந்தவராகவும்.

4. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ்.

(ஆ) சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சை சான்றிதழ்.

(இ) விண்ணப்பதாரரின் நற்குணம் பற்றி அண்மையில் பெறப்பட்ட இரு சான்றிதழ்கள்.

5. அரசாங்க சேவகர்கள், கூட்டுத்தாபன ஊழியர்கள், உள்ளூராட்சி சேவகர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் அங்கத்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவராவர். எனவே, அவர்களுடைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

எஸ். டி. சி. சமரதுங்க,
அரசாங்க அதிபர்,
களுத்துறை மாவட்டம்.

கச்சேரி, களுத்துறை,
1973 ம் ஆண்டு ஏப்ரில் மீ 25 ந் உ.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**களுத்துறை மாவட்டத்தில், பஸ்துன் கோரளை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில், வெலிபென்ன கிராம சபை பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவி**

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் பெரிய எழுத்துக்களில் :—
(குடும்பப் பெயருடன்)

2. முகவரி :—

3. நிரந்தர வசிப்பிடமும், வசித்த காலமும் :—

4. (i) விண்ணப்ப முடிவு திகதியன்று சரியான வயது :—
(ii) பிறப்பிடமும், திகதியும் :—

5. மணமானவரா அல்லது தனி நபரா ? :—

6. கல்வித் தகைமைகள் :—

7. இப்பொழுது செய்யும் தொழில் :—

8. இதற்கு முன் தொழில் செய்தீர்களா ?
இருப்பின், அது பற்றிய விபரங்கள் :—

9. விண்ணப்பதாரரின் சொத்துக்களின் அளவும், பெறுமதியும் விபரங்களுடன் :—

10. விண்ணப்பதாரர் கடனாளியா ? அப்படியாயின் அது பற்றிய விபரங்கள் :—

11. விண்ணப்பதாரர் நீதி மன்றத்தில் குற்றவாளியெனக் காணப்பட்டு தண்டிக்கப்பட்டவரா ? அப்படியாயின், அது பற்றிய விபரங்கள் :—

12. விசேட உரிமை கோரிக்கைகள் இருப்பின், அவை பற்றிய விபரங்கள் :—

———————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

2-147/1—11.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 59.

---

**களுத்துறை மாவட்டத்தில், ரைகம் கோரளை மேற்குப் பி.கா. பிரிவில், அதிகாரி பத்து கிராம சபை பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவி**

களுத்துறை மாவட்டத்தில், ரைகம் கோரளை மேற்குப் பி. கா. பிரிவில் ரைகம, பளுபெ, அதுலுகம, பமுனுமுல்ல, கலனிகம, வேவிட்ட, பண்டாரகம, வீதாகம, ரம்புக்கன, கம்மன்பில, ரேருகான, அலுத்கம, கிந்தெல்பிட்டிய எனும் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கும் அதிகாரி பத்து கிராம சபைப் பிரதேசத்திற்கு திடீர் மரண விசாரணையாளர் பதவிக்காய விண்ணப்பங்கள் கீழ்க்காணும் தகுதிகளுக்குட்பட்டவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1973 ம் ஆண்டு ஜூன் 07 ந் திகதிக்கோ அல்லது அதற்கு முன்பதாகவோ கிடைக்கக் கூடியதாக, "அரசாங்க அதிபர், கச்சேரி, களுத்துறை" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. இப்பதவிக்கு சம்பளம் கொடுக்கப்படமாட்டாது. ஆயினும், ஒவ்வொரு திடீர் மரண விசாரணைக்கும் ரூபா 10/- வீதம் வழங்கப்படும்.

3. தகைமைகள்.—தாம் கீழ்க் காணும் தகைமைகளையுடையோர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் தினத்தன்று 30 வயதிற்குக் கீழ்ப்படாததும் 60 வயதிற்கு மேற்படாததுமான வயது ;

(ஆ) சிறந்த நற்குணமும், உடல் ஆரோக்கியமும் உள்ளவராகவும் ;

B 4 ආ

(இ) விண்ணப்பதாரர் இப்பிரதேசத்தில் நிரந்தர வாசியாகவும் ;

(ஈ) சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் குறைந்த பட்சம் 8 ந் தரத்திலேனும் சித்தியடைந்தவராகவும்.

4. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்க வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்.

(ஆ) சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சை சான்றிதழ்.

(இ) விண்ணப்பதாரரின் நற்குணம் பற்றி அண்மையில் பெறப்பட்ட இரு சான்றிதழ்கள்.

5. அரசாங்க சேவகர்கள், கூட்டுத்தாபன ஊழியர்கள், உள்ளூராட்சி சேவகர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் அங்கத்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவராவர். எனவே, அவர்களுடைய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

6. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

எஸ் டி. சி. சமரதுங்க,
அரசாங்க அதிபர்,
களுத்துறை மாவட்டம்.

கச்சேரி, களுத்துறை,
1973 ம் ஆண்டு ஏப்ரில் மீ 25 ந் உ.

களுத்துறை மாவட்டத்தில், ரைகம் கோரளே மேற்குப் பி. கா. பிரிவில், அதிகாரி பத்து கிராம சபை பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவி

1. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் பெரிய எழுத்துக்களில் :———
(குடும்பப் பெயருடன்)
2. முகவரி :————.
3. நிரந்தர வசிப்பிடமும், வசித்த காலமும் :————.
4. (i) விண்ணப்ப முடிவு திகதியன்று சரியான வயது :————
(ii) பிறபபு இடமும், திகதியும் :————.
5. மணமானவரா அல்லது தனி நபரா ? :————.
6. கல்வித் தகைமைகள் :————.
7. இப்பொழுது செய்யும் தொழில் :————.
8. இதற்கு முன் தொழில் செய்தீர்களா? :————.
இருப்பின் அது பற்றிய விபரங்கள் :————.
9. விண்ணப்பதாரரின் சொத்துக்களின் அளவும், பெறுமதியும் விபரங்களுடன் :————.
10. விண்ணப்பதாரர் கடனாளியா ? அப்படியாயின், அது பற்றிய விபரங்கள் :————.
11. விண்ணப்பதாரர் நீதி மன்றத்தில் குற்றவாளியெனக் காணப் பட்டு தண்டிக்கப்பட்டவரா ? அப்படியாயின், அது பற்றிய விபரங்கள் :————.
12. விசேட உரிமை கோரிக்கைகள் இருப்பின், அவை பற்றிய விபரங்கள் :————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

5–147/2—11.05.73 ந் திகதித வர்த்தமானி இல. 59

---

**களுத்துறை மாவட்டத்தில், பஸ்துன் கோரளே மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில், ஹொரவல கிராம சபை பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவி**

களுத்துறை மாவட்டத்தில், பஸ்துன் கோரளே மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில், ஹொரவல, நவுத்துடுவ, கிரந்திடிய, கொட்டகெதர எனும் கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கும் ஹோரவல கிராம சபைப் பிரதேசத்திற்கு திடீர் மரண விசாரணையாளர் பதவிக்காய விண்ணப்பங்கள் கீழ்க்காணும் தகுதிகளுக்குட் பட்டவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப் பங்கள் 1973, ஜூன் 7 ந் திகதிக்கோ அல்லது அதற்கு முன்ப தாகவோ கிடைக்கக்கூடியதாக, "அரசாங்க அதிபர், கச்சேரி, களுத்துறை" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. இப்பதவிக்கு சம்பளம் கொடுக்கப்படமாட்டாது. ஆயினும், ஒவ்வொரு திடீர் மரண விசாரணைக்கும் ரூபா 10/- வீதம் வழங் கப்படும்.

3. **தகைமைகள்.—**தாம் கீழ்க்காணும் தகைமைகளையுடையோர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் தினத்தன்று 30 வயதிற் குக் கீழ்ப்படாததும் 60 வயதிற்கு மேற்படாததுமான வயது ;

(ஆ) சிறந்த நற்குணமும், உடல் ஆரோக்கியமும் உள்ளவராக வும் ;

(இ) விண்ணப்பதாரர் இப்பிரதேசத்தில் நிரந்தர வாசியாகவும் ;

(ஈ) சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் குறைந்த பட்சம் 8 ம் தரத்திலேனும் சித்தியடைந்தவராகவும்.

4. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்க வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்.

(ஆ) சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சை சான்றிதழ்.

(இ) விண்ணப்பதாரரின் நற்குணம் பற்றி அண்மையில் பெறப் பட்ட இரு சான்றிதழ்கள்.

5. அரசாங்க சேவகர்கள், கூட்டுத்தாபன ஊழியர்கள், உள்ளூ ராட்சி சேவகர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் அங்கத்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவராவர். எனவே, அவர் களுடைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட் டாது. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண் டும்.

எஸ். டி. சி. சமரதுங்க,
அரசாங்க அதிபர்,
களுத்துறை மாவட்டம்.

கச்சேரி, களுத்துறை,
1973 ம் ஆண்டு ஏப்ரில் மீ 25 ந் வ.

களுத்துறை மாவட்டத்தில், பஸ்துன் கோரளே மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில், ஹொரவல கிராம சபை பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவி

1. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் பெரிய எழுத்துக்களில் :————
(குடும்பப் பெயருடன்)
2. முகவரி :————.
3. நிரந்தர வசிப்பிடமும், வசித்த காலமும் :————.
4. (i) விண்ணப்ப முடிவு திகதியன்று சரியான வயது :————
(ii) பிறப்பு இடமும், திகதியும் :————.
5. மணமானவரா அல்லது தனி நபரா ? :————.
6. கல்வித் தகைமைகள் :————.
7. இப்பொழுது செய்யும் தொழில் :————.
8. இதற்குமுன் தொழில் செய்தீர்களா :————.
இருப்பின், அது பற்றிய விபரங்கள் :————.
9. விண்ணப்பதாரரின் சொத்துக்களின் அளவும், பெறுமதியும் விபரங்களுடன் :————.
10. விண்ணப்பதாரர் கடனாளியா ? அப்படியாயின், அது பற்றிய விபரங்கள் :————.
11. விண்ணப்பதாரர் நீதி மன்றத்தில் குற்றவாளியெனக் காணப் பட்டு தண்டிக்கப்பட்டவரா ? அப்படியாயின், அது பற்றிய விபரங்கள் :————.
12. விசேட உரிமை கோரிக்கைகள் இருப்பின், அவை பற்றிய விபரங்கள் :————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

5–147/3—11.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 59

---

**ஸ்ரீலங்கா தரைப்படையில் அதிகாரிகள் ஆளின்மை**

ஸ்ரீலங்கா தரைப்படையில் சட்டமுறை உத்தியோகத்தர் நியமனத் திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் நிரந்தர அரசாணை அமர்வு செய்யப்பட்டு கப்டன் பதவியில் அமர்த்தப்பட்டு ஸ்ரீலங்கா இராணுவ பொது சேவைப் படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

3. (அ) சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பகாரர்களுக்கு பத விக்கேற்ப சம்பளமும் சகாயப்பணமும் பின்வருமாறு கொடுக் கப்படும்.

கப்டன் ... வருடம் ஒற்றிற்கு ரூபா 9,240—8 × 180—ரூபா 10,680 வரை.
(மாதமொன்றிற்கு ரூபா 770—8 × 15—ரூபா 890 வரை)

மேஜர் ... வருடம் ஒன்றிற்கு ரூபா 11,400—8 × 240—ரூபா 13,320 வரை
(மாதமொன்றிற்கு ரூபா 950—8 × 20—ரூபா 1,110 வரை)

லெப்டினன்ட் கேர்ணல்... வருடம் ஒன்றிற்கு ரூபா 15,000—7 × 360—ரூபா 17,520 வரை
(மாதமொன்றிற்கு ரூபா 1,250—7 × 30—ரூபா 1,460 வரை)

(ஆ) கீழ்க்குறிக்கப்பட்டுள்ள படிகளும் கொடுக்கப்படும்:—

**மணமான அதிகாரிகளின் பணிக்கொடை**

மாதம் ஒன்றிற்கு ரூபா 750 ம் ரூபா 775 க்கு குறையவும்—மாதம் ரூபா 97.50

மாதம் ஒன்றிற்கு ரூபா 775 ம் அதற்குக் கூடவும்—மாதம் ரூபா 100.00

**வேறு ஏனைய பணிக்கொடைகள்**

(i) தொடக்க அணியடுக்கு பணிக்கொடை ரூபா 1,000.

(ii) கோல அணிபேணல் பணிக்கொடை மாதம் ரூபா 25.

(iii) வெளியில் வசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட மணமான, மணமாகாத அதிகாரிகளுக்கு மாதம் ஒன்றிற்கு சேவையாளர் பணிக்கொடை மாதம் ரூபா 75.

(iv) பிரிந்திருக்கைப்படி—

(1) தொடர்ச்சியாக 14 நாட்களுக்கு அதிகப்படாத கால வரையறைக்கு, வழமையான கடமைகளின் காரணமாக, பாசறையினுள் வசிக்கும்படி மணமான அதிகாரிகளுக்கு கட்டளையிட்டிருந்தால் நாளொன்றுக்கு ரூபா 1.50.

(2) அவசரகால நிலைமைக்காகவோ அல்லது விசேடமான கடமைகள் காரணமாகவோ தொடர்ச்சியாக 14 நாட்களுக்கு அதிகமான கால வரையறைக்கு பாசறையினுள் வசிக்கும்படி மணமான அதிகாரிகளுக்கு கட்டளையிட்டிருந்தால், நாளொன்றுக்கு ரூபா 2.

(v) பிரயாண அத்துடன் இணைந்த பணிக்கொடைகள் அரசாங்க அதிகாரிகளுக்கு கொடுபடும் படியாகும்.

(இ) உத்தியோகத்தர்கள் கீழ்க்காணப்படும் ஒழுங்குவிதிகளின் படியும் அவரவர்களின் சம்பளம், சேவைக்கேற்பவும் ஆளப்படும்.

(i) 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதிய 12,395 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் தரைப்படை வேதனச்சட்டக் கோவையின் பிரகாரம் காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க.

(ii) 1949 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 10 ஆம் திகதிய 10,028 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1949 ஆம் ஆண்டு உத்தியோகத்தர்களுக்கான ஒழுங்குவிதிகளுக்கும் காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க.

(iii) 1961 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதம் 28 ஆம் திகதிய 12,680 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் தரைப்படை உபகாரச் சம்பள பணிக்கொடைச் சட்டக் கோவைக்கும் காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க.

மற்றும் ஏனைய தகவல்கள் கொழும்பு, தரைப்படைத் தலைமை நிலையத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

4. விண்ணப்பகாரர்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும் :—

(அ) தேசிய இனம்.—விண்ணப்பகாரர்கள் ஸ்ரீலங்கா பிரசையாயிருத்தல் வேண்டும்.

(ஆ) வயது.—விண்ணப்பகாரர்கள் 1973.05.31 திகதியன்று 30 வயதுக்குக் கூடாதவராயிருத்தல் வேண்டும்.

(இ) கல்வித்தகைமையும் உயர்தொழிற்றகைமையும்.—விண்ணப்பகாரர்கள் வழக்கறிஞர்களாக இருத்தலுடன் ஸ்ரீலங்கா உயர் நீதி மன்றத்தில் சட்டவறிஞர் அங்கத்தவராக தீவிர பயிற்சி அனுபவம் உடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஈ) வைத்திய தகைமைகள்.—விண்ணப்பகாரர்கள் தரைப்படை வைத்தியப் பரிசோதனைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள் யாவும் கீழ்க்காணும் விண்ணப்பப் படிவத்தினைப் போன்று எழுதப்பட்டு 1973.05.31 திகதியன்று பகல் 12 மணிக்குப் பிந்தாமல், தரைப்படை தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் கடிதவுறையில் “ தரைப் படைச் சட்ட உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பம் ” என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முடிவு திகதிக்குப்பின் இத் தலைமை நிலையத்தில் கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

6. ஏற்கனவே அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பகாரர்கள், இலங்கை அரச கடற்படை, இலங்கை அரச ஆகாயப்படை உட்பட, தம் திணைக்களத் தலைவருக்கூடாகத் தம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த விண்ணப்பகாரர்கள் தெரிவு செய்யப்படின் அவர்கள் சேவையில் இருந்து விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழ் ஒன்றும் இணைத்தனுப்புதல் வேண்டும். இச் சான்றிதழ் அனுப்பப்படாதவிடத்து அரசாங்க பணிக்கொடை சேவைகள் இராணுவ பணிக்கொடைச் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

7. விண்ணப்பங்களுடன் இவைகளின் பிரதிகள் இணைத்தனுப்புதல் வேண்டும் :—

(அ) பிறப்பிச் சான்றிதழ் ;

(ஆ) கல்வித் தகைமைகளையும் உயர்தொழில் தகைமைகளையும் நிரூபிக்கும் சான்றிதழ் ;

(இ) விண்ணப்பகாரருடன் பரிச்சயமுடைய பொறுப்புவாய்ந்தவர்களினால் வழங்கப்பட்ட குறைந்த பட்சம் இரு நற் சான்றுப்பத்திரங்கள்.

(ஈ) சேர்த்த பத்திரம்.

8. மேலே கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பகாரர்களிலிருந்து தொடக்கத் தெரிவு செய்யப்படும். இதன் பின் இறுதித் தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர்களில் இருந்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்படும் தேர்வுச் சபை ஒன்றினால் நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படும். தேர்வுச் சபைகளினால் நேர்முகப் பரீட்சைகளுக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரருக்கு அத்தகையமை பற்றி இடம், நேரம், திகதி, காலம் என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைகள் யாவும் கொழும்பில் நடாத்தப்படும். இத் தொடர்பில் ஏற்படும் எவ்வித பிரயாணச் செலவோ அல்லது பிற செலவுகளோ ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் கொடுக்கப்படமாட்டாது.

9. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கென விசேடமாக அரசாங்க மொழியதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஏற்கனவே செய்யப்பட்ட விதிகளுக்கும் அல்லது இனிமேல் செய்யப்படும் விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

10. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் இராணுவ பயிற்சி செய்யப்பட்டுப் பின் சட்டமுறை தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு ஏதாவது ஓர் படைப்பிரிவில் அமர்த்தப்படுவர். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் நாட்டின் எப்பாகத்திலும் சேவை செய்யுமாறு வேண்டப்படுவர்.

11. பதவி உபகாரச்சம்பள உரிதுடையதல்ல. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் ஒரு சகாய நிதிக்குத் தமது உதவுதொகையாகத் தமது திரட்டிய சம்பளத்தின் ஆறு சதவீதத்தைக் கழித்தற்கு எழுத்துருவிலான தமது சம்மதத்தைக் கொடுக்குமாறு வேண்டப்படக்கடவர். ஒரு சேவை உபகாரச் சம்பளத்தை அல்லது பணிக்கொடையை வழங்கப்படுத்தலைக் குறிக்கும் 1961 ஆம் ஆண்டின் தரைப்படை உபகாரச் சம்பளங்களும், பணிக்கொடைகளும் பற்றிய சட்டக்கோவையிலுள்ள ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவாகா.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
தரைபடைத் தளபதிக்காக.

1973.04.30.

ஸ்ரீலங்கா தரைப்படையில் சட்டமுறை உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) :————.

2. தேசிய இனம் (பரம்பரையான இலங்கைப் பிரசையா அல்லது பதிவுமூலம் இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடவும், பதிவுமூலம் இலங்கைப் பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக) : ————.

3. முகவரி : வீட்டு விலாசம் :————.
அலுவலக விலாசம் :————.

4. பிறந்த திகதி : 1973.05.31 திகதியன்று வயது :————.
வருடம் :————. மாதம் :————. நாள் :————.

5. பிறந்த இடத்தின் பெயரும் தற்போதைய முகவரியும் : ————.

| | முழுப் பெயர் | பிறந்த இடம் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை .. | | | |
| தாய் .. | | | |

6. நீர் விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? :————.

7. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உடற்பயிற்சி விளையாட்டுகளில் நீர் பெற்ற தனிச்சிறப்புகள் :————.

8. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உமக்குரிய சிறப்பாகப் பெற்ற பிற செயல்கள் :————.

9. படைக்கலந்தாங்கு சேவைகளில் இலங்கை தொண்டர் படை, இலங்கை பயிலுநர் சிறப்பணி, அல்லது சாரணர் படை, ஆகிய நிறுவகங்களில் சேவை செய்திருப்பின் அதன் விபரங்கள் :————.

10. இந் நியமனம் சம்பந்தமாக உமக்குரிய வேறு விசேட தகைமைகள் :————.

11. இதற்குமுன் படைக்கலந் தாங்கு சேவைகளில் ஏதாவது ஒன்றிற்கு விண்ணப்பித்திருப்பின் அதன் முடிவு என்ன என்பதைக் குறிப்பிடுக :————.

12. கீழ்க்காணும் பாடசாலை அல்லது சர்வகலாசாலையின் விபரங்களைத் தருக :————.
பாடசாலை அல்லது சர்வகலாசாலையின் பெயர் :————.
சேர்ந்த திகதி :————.
விலகிய திகதி :————.
பொது/உயர்தொழில் கல்வி சித்தியடைந்த பயிற்சிகள் :
————.

13. பாடசாலையை அல்லது சர்வகலாசாலையை விட்டு விலகிய பின் நீர் செய்த தொழில் விபரங்களைக் கீழே தருக :——.

வேலை கொள்வோரின் பெயர் :————

செய்த தொழில் :————.

சேவை செய்த காலம் :————.

————தொடக்கம்————வரை

14. நற்சான்றுப் பத்திரங்கள் வழங்கியோரின் பெயர்களும் முகவரியும் :————.

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விடைகளும் தகைமைகளும் சரியானவை என்றும் உண்மை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

2-188—11.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 59.

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

*அரசகரும மொழித் திணைக்களம்*

*சிங்களத் தட்டெழுத்துப் பயிற்சி வகுப்புகள்*

அரசகரும மொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படவிருக்கும் மேற்படி பயிற்சி வகுப்புகளிற் சேர்வதற்குத் தகைமையுடைய ஆண், பெண் ஆகிய இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த வகுப்புகள் ஏறத்தாழ ஓராண்டு காலம் தொடர்ந்து நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது; வகுப்புகள் கொழும்பில் அலுவலக நேரங்களில் நடைபெறும். ஏறத்தாழ 40 பயிற்சியாளருக்கு இடமுண்டு.

2. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குச் சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) இலங்கையராயிருத்தல் வேண்டும் (பாம்பரை வழியாக அல்லது பதிவுபெற்று இலங்கைப் பிரசையானவரே இலங்கையர் எனப்படுவர்)

(ஆ) (i) இலங்கைச் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்; சிங்களத்திலும், எண்கணிதம், ஆரம்ப கணிதம், வர்த்தக கணிதம் ஆகியவற்றுள் ஒன்றும் உட்பட நான்கு பாடங்களில் திறமைத் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்; அல்லது

(ii) கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ் (சாதாரண தரம்) பெற்றிருத்தல் வேண்டும்; ஆறு பாடங்களில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் சிங்களத்திலும், எண் கணிதம், தூயகணிதம், ஆரம்ப கணிதம், வர்த்தக கணிதம் ஆகியவற்றுள் ஒரு பாடம் உட்பட நான்கு பாடங்களில் திறமைத் தேர்ச்சியடைந்திருப்பதுடன் ஒரே முறையில் குறைந்தது ஐந்து பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) 11.06.1973 அன்று 17 வயதுக்குக் குறையாதவராயும் 22 வயதுக்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும்.

(ஈ) சிறந்த நற்குணமுடையவராயும் உடல்நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பகாரர் கொழும்பில் நடைபெறவிருக்கும் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு அல்லது சோதனைக்குச் சமுகமளித்தல் வேண்டும். அவற்றிற்காகிய காலமும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும். பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டா. விண்ணப்பத்திலுள்ள விபரங்களில் எதுவாயினும் பிழையாக விருப்பது தெரிவுக்குமுன் காணப்படின் விண்ணப்பகாரர் தெரிவுக்குரிய தன் தகைமைகளை இழப்பர். தெரிவு செய்யப்பட்ட பின் கண்டுபிடிக்கப்படின் அவர் வகுப்பிலிருந்து நிறுத்தப்படுவதற்கு ஆளாவர்.

4. பயிற்சிக் காலத்தில் எவ்வகைப் படியாயினும் கொடுக்கப்படமாட்டாது. பயிற்சி முடிந்ததும் இந்தத் திணைக்களத்திலோ, அரசாங்க சேவையிலோ தற்காலிகமாகவேனும், நிரந்தரமாகவேனும் வேலை கொடுக்கப்படுமென உத்தரவாதமளிக்க முடியாது.

5. பயிற்சிக் காலத்தில் காலத்துக்குக் காலம் சோதனைகள் நடத்தப்படும்; அச்சோதனைகளின் பெறுபேறுகளின்படியே பயிற்சியாளர் தொடர்ந்து பயிற்சிபெற அனுமதிக்கப்படுவர். எப்பயிற்சியாளரினதும் வரவு, படிப்பு, பொதுத் தகுதி அல்லது நடத்தையில் இத்திணைக்களத்திற்குத் திருப்தியேற்படாவிடின் அன்னார் பயிற்சிக் காலத்தில் எந்நேரத்திலாயினும் உடனடியாக நீக்கப்படுவதற்கு ஆளாவர். அவ்வாறு நீக்கப்பட்ட பயிற்சியாளர் எவராயினும் பின்னர் வரும் பயிற்சி வகுப்புகளிற் சேர்வதற்குத் தகவுடையராகார். காலத்துக்குக் காலம் பிறப்பிக்கப்படும் பிரமாணங்கள், அறிவுறுத்துரைகள் ஆகியவற்றிற்கு அமைந்து நடப்பதாக ஒரு உடன்படிக்கை, அதற்கெனவுள்ள ஒரு படிவத்தில் எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுக்குமாறு ஒவ்வொரு பயிற்சியாளரும் வேண்டப்படுவர்.

6. பயிற்சியின் முடிவில் தகுதியைத் தீர்மானிக்கும் பரீட்சையொன்றும், அதன் பின்னர், இறுதிப்பரீட்சையும் நடைபெறும். தட்டெழுத்து, சிங்களமொழி என்னும் விடயங்களைக் கொண்ட இந்தப் பரீட்சையில் தேர்ச்சியடைந்தால் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

7. பயிற்சியாளர் வேண்டுமென்று அசட்டை செய்தல், கவனமில்லாதிருத்தல் ஆகியவற்றின் விளைவாகக் களஞ்சியப் பொருள்கள் காணமற் போவதாலும் உபகரணங்கள் முதலியன சேதமடைவதாலுமேற்படும் நட்டத்தை ஈடுசெய்வதன் பொருட்டு ஒவ்வொரு பயிற்சியாளரும் வகுப்பிற் சேரும்போது, ரூபா 100 பிணை, இரண்டு பிணைக்காரர் மூலம் செலுத்தல் வேண்டும்.

8. இவ்வகுப்புகளிற் சேர்வதற்காகிய விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பகாரரின் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டு ஆணையாளர், அரசகரும மொழி அலுவல்கள், த. பெ. 598, கொழும்பு 7 என முகவரியிட்டு 11.06.1973 அன்று அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஆணையாளரின் பெயருக்கு அனுப்பக் கூடாது.

பீற்றர் பி. அபயசேகரா,
ஆணையாளர்,
அரசகரும மொழி அலுவல்கள்.

அரசகரும மொழித் திணைக்களம்,
22, நீட் வழி,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு ஏப்பிறல் மீ 27 ந் உ.

**சிங்களத் தட்டெழுத்துப் பயிற்சி வகுப்பிற் சேர்வதற்காகிய விண்ணப்பம்**

1. முழுப்பெயர் :————.
(தெளிவாக எழுதுக)

2. முகவரி :————.

3. தேசிய இனம் :————.
(பாரம்பரையான இலங்கையரா அல்லது பதிவுபெற்ற இலங்கையரா வென்பதைக் குறிப்பிடுக)

4. 11.06.73 அன்று வயதும் பிறந்த திகதியும் :————.
(பிறப்புச் சான்றிதழ் (ஒரு படி மாத்திரம்) இணைக்கப்படுதல் வேண்டும்).

5. ஆண்/பெண் :————.

6. மணமானவர்/மணமாகாதவர் :————.

7. சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சையும், பாடங்களும், திகதிகளுடன் :————.

8. இலங்கைச் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ்ப் பரீட்சை அல்லது கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ் (சாதாரண தரம்) பரீட்சையில் திறமைத் தேர்ச்சியும் சாதாரணத் தேர்ச்சியும் பெற்ற பாடங்கள் (படிகளை இணைக்க ; மூலங்களையல்ல. இன்னும் சான்றிதழ்கள் கிடைக்காவிட்டால் அவ்வாறு குறிப்பிடும் அதிபரின்/தலைமை ஆசிரியரின் சான்றிதழ் அல்லது வேறு செல்லுபடியான சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்) :————.

9. கல்வி கற்ற இடமும் தேதியும் :————.

10. சிங்களத்திற் பெற்ற விசேட தகைமைகள் உண்!டாயின் அவை :————.

11. சிங்கள/தமிழ்/ஆங்கில தட்டெழுத்திற் பெற்றுள்ள அனுபவம் :————.

12. இப்பொழுது ஏதாவது தொழில் செய்வதாயின் அத்தொழில் :————.

13. பெற்றோர்/பாதுகாவலர் பெயரும் முகவரியும் :————.

14. இரு நடுவரின் பெயர்களும் பதவிப் பெயர்களும் :————.

15. குணச் சான்றிதழ் வழங்கியவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் (படிகள் மாத்திரம்) இணைக்கப்படுதல் வேண்டும் ; ஒரு சான்றிதழ் கடைசியாகப் படித்த பாடசாலைத் தலைமை ஆசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் (மூன்று சான்றிதழ்கள்) :————.

16. வேறு தகைமைகள் உண்டாயின், அவை :————.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

2–204—11.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 59.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

**குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—*குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.*

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| மே | 4.5.73 | வெள்ளி | 25.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 11.5.73 | வெள்ளி | 2.5.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 18.5.73 | வெள்ளி | 9.5.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 25.5.73 | வெள்ளி | 15.5.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| யூன் | 1.6.73 | வெள்ளி | 23.5.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 8.6.73 | வெள்ளி | 30.5.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.6.73 | வியாழன் | 6.6.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 22.6.73 | வெள்ளி | 13.6.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 29.6.73 | வெள்ளி | 20.6.73 | புதன் | ந.ப. 12.00 |

**எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
கொழும்பு,
1972 ம் ஆண் ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது